மிக மிக அவசரம்

மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் முதன்மைக்கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்
ந.க.எண்.66அ/ஒபக/2020–21, நாள் :15.03.2021

பொருள்: ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி – 2020–21 கல்வியாண்டு – அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு அடையாள அட்டை வழங்குதல் – படிவத்தை பூர்த்தி செய்து மாவட்ட திட்ட அலுவலகத்தில் சமர்ப்பித்தல்– சார்பு

பார்வை: மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.658/C3 /SS/2020, நாள்: 15.02.2021

------

பார்வையில் கண்டுள்ளபடி ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் வாயிலாக 2020–21ஆம் கல்வியாண்டில் Project Innovations எனும் தலைப்பின்கீழ் அரசு உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாத பணியாளர்கள் பயன்பெறும் வகையில் அவர்களுக்கு புகைப்படம், QR கோடுடன் கூடிய அடையாள அட்டை வழங்கிட ஆண்டு வரைவு திட்டத்தில் திட்ட ஏற்பளிப்புக்குழு அனுமதி வழங்கியுள்ளது. அவ்வாறு அடையாள அட்டை வழங்குவதற்கு புதிதாக பணிநியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்கள், பணிமாறுதலில் பணியில் சேர்ந்துள்ள ஆசிரியர்கள், பதவி உயர்வு பெற்ற ஆசிரியர்கள் மற்றும் பழுதடைந்த அட்டையை புதுப்பிக்க வேண்டிய ஆசிரியர்களுக்கு முன்னுரிமை வழங்கவும் அனைத்து உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இணைப்பில் உள்ள படிவத்தில் ஆசிரியர்களின் விவரத்தை 17.03.2021க்குள் பூர்த்தி செய்து தலைமை ஆசிரியர் கையொப்பமிட்டு மாவட்ட திட்ட அலுவலகத்திற்கு தனிநபர் மூலம் அனுப்பிட அனைத்து உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

15-3-21

மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர்(ஒபக)
மற்றும் முதன்மைக்கல்வி அலுவலர்,
வேலூர் –6.

இணைப்பு:–
படிவம் – I,II

பெறுநர்:–
அனைத்து அரசு உயர் / மேல்நிலைப்பள்ளி, தலைமையாசிரியர்கள்

நகல்:–
1. முதன்மைக் கல்வி அலுவலர்கள், இராணிப்பேட்டை, திருப்பத்தூர்
2. மாவட்ட கல்வி அலுவலர்கள், அரக்கோணம், இராணிப்பேட்டை, வேலூர், வாணியம்பாடி, திருப்பத்தூர்
3. அலுவலகக் கோப்பு.

Scanned with CamScanner